செய்தி வெளியீடு எண். 65-2017 நாள்: 31.05.2017

விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் காலியாகவுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் காலியாகவுள்ள 54 துப்புரவு பணியாளர்களை நிரப்புவதற்கு இனச்சுழற்சி முறையில் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் நேரடி நியமனம் செய்யும் பொருட்டு 01.06.2017 முதல் 15.06.2017-க்குள் (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர) மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் முதல் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விருப்பமுள்ள மற்றும் தகுதியான விண்ணப்பதாரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். (நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம்).

தொகுப்பு ஊதியம் மாதம் ரூ.2000/- அடிப்படையில் 53 நபர்கள் தேர்வு செய்யப்பட இருக்கின்றனர். இதில் ஆண் 35, பெண் 15 மற்றும் 3 ஆண் துப்புரவாளர் முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பு காலமுறை ஊதியம் மாதம் ரூ.2500-5000+500 ஒரு ஆண் நபருக்கும் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு விதிகளின்படி விண்ணப்பதாரர்கள் குறைந்த பட்ச வயது 01.07.2017 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 18 வயது நிரம்பியவர்களாகவும், அதிகபட்ச வயது (01.07.2017 அன்று உள்ளவாறு) 35 வயதுக்குள் இருத்தல் வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் (முஸ்லீம்) 01.07.2017 அன்று 18 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது (01.07.2017 அன்று உள்ளவாறு) 32 வயதுக்குள் இருத்தல் வேண்டும். மற்றும் முன்னாள் படைவீரர் 01.07.2017 அன்று 50 வயது நிரம்பியவர்களாகவும், அதிகபட்ச வயது (01.07.2017 அன்று உள்ளவாறு) 53 வயது இருத்தல் வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.